மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன் :

"In the Preamble, in the first paragraph, *for* the expression 'In April 1989' *substitute* the expression 'during April-May 1989'.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்ற பெற்றது.

முகப்புரை திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ் நாடு மாநகராட்சிகள் சட்டங்கள் (தனி வகை முறைகள் மற்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1989) திருத்தப்பெற்ற படி நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற்றது.

4. அமைச்சரின் அறிக்கை.

பிள்ளைப்பேறு மருத்துவத்தில் பயன்படும் ஒரு மருந்தில் 'எயிட்ஸ்' வியாதிக்கான அறிகுறிகள் இருப்பதால் அம் மருந்து தடை செய்யப்பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விதி 110-இன் கீழ் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அகில இந்திய சுகாதார மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 1989 ஆம் ஆண்டு

1989 பிப்ரவரி 18]

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

பிப்ரவரி மாதம் 2 ஆம் தேதியன்று டில்லி சென்றிருந்தபொழுது அன்றைய செய்தித்தாள் ஒன்றில் ஒரு செய்தியைப் படித்தேன். அதில் "சில பிள்ளைப்பேறு மருத்துவத்தில் தாய்மார்களுக்கு (R.H. Negative) ஆர். எச். நெகடிவ் இரத்தம் இருக்குமானால் ஆண்டி (ரோ) இன்முவகுளோபுலின் பி.பி. ((Anti D RHO) Inmuvaglobulin B.P. Injection என்ற ஊசி மருந்து போடப்படும். இது இரத்தத்திலிருந்து தயாரிக்கப்படும் மருந்தாகும். இம்மருந்தில் எயிட்ஸ் (AIDS) வியாதிக்கான அறிகுறிகள் இருப்பது டில்லியில் கண்டுபிடிக்கப்பட்டு மக்களிடையே பெரும் பீதியை கிளப்பியுள்ளது. இச்சந்தேகம் சென்னைவாசிகளிடமும் வந்துள்ளது. அமைச்சரும், இயக்குநரும் டில்லியில் இருப்பதால் அவர்கள் திரும்பி வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று செய்தி வெளியாகியிருந்தது. இச்செய்தியைப் படித்தவுடன் டில்லியிலேயே அங்கிருந்து இயக்குநர்களைக் கலந்து ஒரு முடிவெடுத்து சென்னையில் இம்மருந்துகள் கொடுப்பதைத் தடுத்து நிறுத்துமாறு உத்திரவிடப்பட்டது. திரும்பியவுடன் இம் மருந்துகளின் மாதிரிகள் சென்னை பொது மருத்துவமனையில் இருக்கும் எயிட்ஸ் சர்வெயிலன்ஸ் சென்டருக்கு (Aids Surveillance Centre) அனுப்பப்பட்டு பரிசோதிக்கப்பட்டன. இதில் 'எயிட்ஸ்' வியாதிக்கான அறிகுறிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அதன் முடிவை உறுதி செய்து கொள்வதற்காக மேலும் அது வேலூர் மருத்துவ மனையில் உள்ள 'வெஸ்டெர்ன் பிளாட்' (Western Plot) பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. அங்கும் இவ்வுண்மை உறுதி செய்யப்பட்டது.

(பிற்பகல் 1-30)

இன்று, 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் தேதி இச் செய்தி டில்லியில் உள்ள இந்திய மருத்துவ கவுன்சிலுக்கும் (Indian Council of Medical Research) மத்திய அரசின் சுகாதாரத் துறையின் டைரக்டர் ஜெனரலுக்கும் (Director General of Health Services) இந்திய அரசின் மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி (Drug Controller of India) -க்கும் அனுப்பப்பட்டது.

இச்செய்தி தமிழகத்தில் உள்ள தனியார் மருத்துவ மனைகளுக்கும் அனுப்பப்பட்டு இம்மருந்துகள் தடை செய்யப்பட்டுள்ளன. இதுவரை இம்மருந்து கொடுக்கப்பட்ட சுமார் 100 பேர்,

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

களையும் பரிசோதிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மக்களின் உயிரோடு விளையாடும் இக்கம்பெனிகள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு தமிழ்நாடு ஊராட்சிகள் திருத்த சட்டமுன்வடிவு திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை (20—2—1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

7. ஆயத்தீர்வை செலுத்துதல் குறித்து உள் மற்றும் மது விலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13 ஆம் நாளிட்ட 207-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

8. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகளின் அடிப்படை விலையினை நிர்ணயிக்கும் அதிகாரத்தினை மது விலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் ஆணையருக்கு வழங்குவது குறித்து உள் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறையின் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 ஆம் நாளிட்ட 217-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].